**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.**

**Date:** 10.11.2025.

வா.சா.1 - திரு.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.

**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.46/2023**

Date: 10.11.2025.

வா.சா.2 - திரு. மனோகரன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பாலப்பள்ளம் ஊரில் வசிக்கிறேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மந்திவிளை என்று உள்ளது என்றால், அது பாலப்பள்ளம் மந்திவிளை. நான் டிக்சன் ஜினுவிற்கு சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். மந்திவிளை குளச்சல் கிராமத்தில் உள்ளது. நான் கூலி வேலை செய்கிறேன். நீதிமன்ற அழைப்பாணை எனக்கு வரவில்லை, வாதி தான் என்னை அழைத்து வந்தார். வாதியை எனக்கு 20 வருடங்களாக பழக்கம். சிறு வயது முதலே பழக்கம். எனக்கு 3 பிள்ளைகள் உள்ளது. ஒரு ஆண், இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறது. 2 வது பெண் மகளை பாஞ்சிக்காட்டிலும், முதல் மகளை தக்காளி விளையிலும் திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். டிக்சன் ஜினோவின் மனைவி பாஞ்சிக்காடு ஊரை சார்ந்தவர். அவருடைய சகோதரனுக்கு தான் எனது இளைய மகளை திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். இவ்வாறு டிக்சன் ஜினோ எனக்கு உறவு முறை என்றாலும், அதன் அடிப்படையில் தான் நான் அவர் சார்பில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். கூலி வேலையைத் தவிர சித்தாள் வேலையும் செய்கிறேன். கார் ஓட்டத் தெரியாது. எனது ஊருக்கும் டிக்சன் ஜினோ ஊருக்கும் 2 1/2 கி. மீ தூரம் இருக்கும். தற்போது என்னிடம் காட்டப்படும் வ.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணங்களில் உள்ள சொத்தை தான் நான் அனுபவம் எடுத்ததாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். சொத்து

சம்பந்தமாக வேறு ஆவணங்களை நான் பார்த்தது கிடையாது என்றால், சரிதான். பட்டிகை சொத்து வாதியின் வீட்டிற்கு சிறிது தள்ளி உள்ளது. ஆவணப் பூர்வமாக சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் குறிப்பிடுவது போல பட்டிகை சொத்தை எடுத்து வாதிக்கு அனுபவம் கொடுத்ததாக நான் சொல்வது உண்மை இல்லை என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் தான் பட்டிகை சொத்தில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. நான் வாதியின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் கூலி வேலை எதுவும் செய்யவில்லை என்றாலும், ஆனக்குழி பொன்னம்மாளுக்கு கார் ஓட்டும் தொழில் செய்கிறேன் என்றால், முதலில் டிம்போ ஓட்டினேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.